# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2016/17 - 2017 අප්‍රේල් මස 25 වැනි අඟහරුවාදා - 2017.04.25

2016/17 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

தொடர்பிலக்கம்: MCUDP/LA/ABT/ (W-05 ) /14/03.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:4-3/10/2014/ LRB/292.

கொழும்பு தலைநகரத்தை அண்டிய மாநகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்ற உப செயற்றிட்டம் ஒன்றான கிழக்கு மாதிவெல திருப்பும் ஆற்றின் இடது பக்கம் தண்ணீர் பம்பிங் நிலையம் ஒன்று அமைத்தல் மற்றும் ஆற்றின் பாதுகாப்புக்காக காணி எடுத்துக்கொள்வதற்காக கீழே விவரிக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் கொலொன்னாவை பிரதேச செயலகப் பிரிவில் உடுமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குச் சொந்தமான உடுமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் 2017.04.11 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் கொ 9685 உடைய ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டு இலக்கங்கள் 1 மற்றும் 2 எனக் குறிக்கப்பட்டுள்ள 0.8490 ஹெக்டயார் விஸ்தீரணங் கொண்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள்.

**1. துண்டு இல. 01**
காணியின் பெயர்: குருந்துகொடெல்லஓவிட அல்லது மஹதுவ பில்லேவ; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: என். ஆரியரத்ன, இல. 62, அம்பதலே, முல்லேரியாவ புதிய நகரம்; விஸ்தீரணம்: 0.8112 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**
காணியின் பெயர்: குருந்துகொடெல்லஓவிட அல்லது மஹதுவ பில்லேவ; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: கே. ஏ. டி. நந்தசிறி, இல. 112, வெவ வீதி, உடுமுல்ல, முல்லேரியாவ புதிய நகரம்; விஸ்தீரணம்: 0.0378 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, ராஜகிரிய, வெலிகட, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 03, இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான கூட்டுத் தாபனத்தில் அமைந்துள்ள கொழும்பு தலைநகரத்தை

அண்டிய மாநகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் காணிகள் எடுக்கும் அலுவலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சீ. டபிள்யூ. அபேசூரிய
காணிகள் எடுத்தல் அதிகாரி.

கொழும்பு தலைநகரம் அண்டிய மாநகர அபிவிருத்தி செயற்றிட்டம்,
இல. 03, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, ராஜகிரிய,
2017, ஏப்பிறல் 24.

5 - 258